

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்

கண்ணம்பாளையம் பேரூராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண் . 323/1B6, 323/1B7, 323/1B8 மற்றும் 323/1B9- ல்அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : LEU90P6I	அளவு - 1 : 400

வ

குறிப்பு:

உத்தேச மனைப்பிரிவின் பரப்பு - 6374.00 ச.மீட்டர்

ஒதுக்கிய மனைகள் - 45

மனைப்பிரிவின் எல்லை -

நிலையிலுள்ள சாலை -

மனைப்பிரிவு சாலை -

பொது ஒதுக்கீடு:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டயவை:

மனைப்பிரிவு சாலை - 1162.881 ச.மீட்டர்

மனைப்பிரிவு சாலை பரப்பளவு நீங்கலாக மனைகளின் பரப்பு (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - உத்தேச சாலை பரப்பு)

(6374.00 ச.மீ - 1162.881 ச.மீ) = 5211.119 ச.மீ

ii) பூங்கா ஒதுக்கீடு:

தேவையான பரப்பு

= (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%

(6374.00 - 1162.881) x 10% = 521.11 ச.மீ

அரசாணை எண். 18 - ன் படி 10% பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்க்கு ஈடான 521.11 ச.மீ பரப்பளவிற்கு அரசு வழிகாட்டி மதிப்பு தொகையினை மனுதாரர் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

iii) பொது உபயோகம் மற்றும் TANGEDCO ஒதுக்கீடு:

தேவையான பரப்பு - (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலை) x 0.5%

- (6374.00 - 1162.881) x 0.5% = 26.06 ச.மீட்டர்

பொது உபயோகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு - 26.94 ச.மீட்டர் (0.517%)

TANGEDCO - விற்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு - 26.87 ச.மீட்டர் (0.516%)

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்ததுறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளவேண்டும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு வழங்கப்பட்ட சான்றுகள் சரியானவையல்ல என்று அறியப்பட்டலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படல் வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 60cm x120cm அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

5. அரசாணை எண். 181 வீ.வ (ம) ந.வ. துறை நாள். 09.12.2020 ன் படி உத்தேச மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைநீர் தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் தகுதிகேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ / கோ.உ.தி.கு.எண் : **491/2023**

திட்ட அனுமதி எண் : **570/2023**

(இணையதள வாயிலாக)

ச.கார்த்திக்	லோ. வனிதா	சு. மோகனா
உதவி / உதவி வரைவாளர்	வரைவாளர் நிலை - 3	கட்டிட கலை / திட்ட உதவியாளர்

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ)

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்

கோயம்புத்தூர் மாவட்டம்